2019 ஜூலை 8] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

காரணமாக, தங்களுடைய மாவட்டத்தில் எந்தத் திட்டமும் அறிவிக்கப்படவில்லை என்ற ஒரு கருத்தைச் சொல்கின்ற விதமாகச் சொல்லியிருக்கின்றார்கள். அங்கே நாடாளுமன்றத் தேர்தல் அறிவித்த காரணத்தினாலே, Code of Conduct *இருப்பதால், புதிய அறிவிப்புகள் எதுவும் வெளியிட முடியாது. அவர்கள் ஏற்கெனவே புதிய அறிவிப்புகள் வெளியிட்டதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு மின் துறை அமைச்சரின் மானியக் கோரிக்கையில் அவருடைய அறிவிப்பிலே ஏற்கெனவே சில அறிவிப்புகள் அச்சடிக்கப்பட்டு விட்டன. அவர்களும் அந்த அறிவிப்பிலே அச்சிடப்பட்டபடி, அப்படியே அறிவித்துவிட்டார். நீங்கள் சொன்னவுடன் அது நீக்கப்பட்டுவிட்டது. ஆகவே, இந்தத் தேர்தல் முடிந்தவுடன் வேலூர் மாவட்டத்திற்கும் தேவையான திட்டங்கள், புதிய அறிவிப்புகள் வெளியிடப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன் பிடித்தலில் ஈடுபடும் தொழிலாளர்கள் மற்றும் அதனைச் சார்ந்துள்ள செயல்பாடுகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன் பிடித்தலில் ஈடுபடும் தொழிலாளர்கள் மற்றும் அதனைச் சார்ந்துள்ள செயல்பாடுகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன் பிடித்தலில் ஈடுபடும் தொழிலாளர்கள் மற்றும் அதனைச் சார்ந்துள்ள செயல்பாடுகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. அறிவிப்பு

'காகிதமில்லா சட்டமன்றம்' எனும் இலக்கினை எய்திடும் வகையில் 2019–2020 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது அளிக்கப்பட்டவற்றுள் அனுமதிக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் மென்பொருள் வடிவில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், சம்பந்தப்பட்ட துறைகளுக்கும் மின்னஞ்சல்மூலம் அனுப்பப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. காகிதம் இல்லா சட்டமன்றம் என்ற நிலையினை உருவாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் தொடர்ச்சியாக 2019–2020 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்களால் அளிக்கப்பட்டு, அனுமதிக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் தொகுத்து தயார் செய்யப்பட்டு அவற்றின் 5 பிரதிகள் மானியக் கோரிக்கைகள் எடுக்கப்பெறும் நாளன்று மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்றப் பேரவை நூலகத்தில் வைக்கப்படும். அவற்றின் மென்பொருள் நகல் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், சம்பந்தப்பட்ட துறைகளுக்கும் முன்னதாகவே மின்னஞ்சல்மூலம் அனுப்பி